DINAMALAR

PAGE NO: 04

DATE: 12.09.2023

# புவிசார் அறிவியலில் இந்தியாவை மறுவடிவமைக்கும் புத்தகம் வெளியீடு

**புதுச்சேரி, செப். 12–**

புதுச்சேரி பல்கலையில் புவிசார் அறிவியலில் இந்தியாவை மறுவடிவமைக்கும் புத்தகம் வெளியிடப்பட்டது.

புதுச்சேரி பல்கலைக் கழக சர்வதேச உறவுகள் துறை புல முதன்மையர் சுப்ரமணிய ராஜீ வரவேற்றார். துணை வேந்தர் குர்மீத் சிங் தலைமை தாங்கினார். அரசியல் மற்றும் சர்வதேச ஆய்வுகள் துறை இணை பேராசிரியர் நந்த கிஷோர் அறிமுக உரையாற்றினார்.

'இந்தியாவின் விரிவான தேசிய சக்தி மற்றும் பாதுகாப்புக்கான தலைமை' என்ற தலைப்பில் லெப்டினன்ட் ஜெனரல் வினோத் ஜி கந்தாரே சிறப்புரையாற்றினார். தொடர்ந்து அரசியல் மற்றும் சர்வதேச ஆய்வுகள் இணை பேராசிரியர் நந்தகிஷோர் எழுதிய 21ம் நூற்றாண்டின் புவிசார் அரசியலில் இந்தியாவை மறுவடிவமைக்கும் புத்தகம் வெளியிடப்பட்டது.

உதவி பேராசிரியர் ரிச்சா திவாரி நன்றி கூறினார்.